


08.06.2025

தலைப்பு செய்திகள்

- மகளிர் முன்னேற்றத்திற்கான தொடர் நடவடிக்கைகளை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த 11 ஆண்டுகளாக முனைப்புடன் மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு.அமித்ஷா மதுரையில் இன்றுமாலை கட்சியின் தென்மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றுகிறார்
- பிரான்சில் இன்று தொடங்கும் சர்வதேச பெருங்கடல்கள் மாநாட்டில் மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஜீதேந்திரசிங் பங்கேற்கிறார்.
- தமிழ்நாட்டில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பத்தாயிரத்து 639 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருவதாக அரசு அறிவித்துள்ளது.
- பிரென்ஞ் ஓப்பன் டென்னிஸ் கிராண்ஸ்லாம் ஆடவர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் ஸ்பெயினின் Carlos Alcaraz - இத்தாலியின் Jannik Sinner ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

பிரதமர்

வளர்ச்சியடைந்த இந்தியாவில் மகளிர் ஆக்கப்பூர்வமான பங்களிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 11 ஆண்டுகள் நிறைவு செய்த நிலையில் அறிவியல், கல்வி, விளையாட்டு, ஸ்டார்ட்அப், பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் மகளிர் முன்னேறி வருவதுடன் நாட்டுமக்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அவர் பாராட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் மகளிர் சார்ந்த முன்னேற்றத்திற்கான தொடர் முன்னெடுப்புகளை தேசிய ஜனநாயக கூட்டணி உறுதி செய்து வருவதாக குறிப்பிட்டார்.

இலவச சமையல் எரிவாயு இணைப்பு, ஜன்தன் வங்கி கணக்குகள் மகளிர் ஆளுமையை அதிகரித்துள்ளதாக கூறினார்.

குறிப்பாக முத்ரா கடனுதவி திட்டம் லட்சக்கணக்கான மகளிரின் தொழில்முனைவோர் கனவுகளை நனவாக்கியதுடன் அவர்களின் அவர்களின் மதிப்பை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மகளிர் பாதுகாப்பு மற்றும் ஆளுமையை அதிகரிக்கவே, பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் மகளிர் பெயரில் வீடு வழங்கப்படுவதாக கூறிய பிரதமர், பேட்டி பச்சாவோ ! பேட்டி படாவோ ! பெண் குழந்தைகளை காப்போம் ! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் ! தேசிய இயக்கமாக வலுப்பெற்றுள்ளதாக பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖❖

பிரதமர்

தீவிரவாதம் மற்றும் அவர்களுக்கு துணை நிற்பவர்களுக்கிடையில் எந்த வேறுவாடும் காட்டப்படாது என பிரதமர் திரு.நரேந்திரமோடி மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளார்.

எல்லைதாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை குறித்த பாதுகாப்பு துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் எழுதிய கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் மறு பகிர்விட்டுள்ள பிரதமர், நாட்டின் மீதான எந்வொரு தாக்குதலுக்கும வலுவான பதிலடி கொடுக்கப்படும் என்ற கருத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

❖❖❖❖❖

அமித்ஷா

பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு.அமித்ஷா மதுரை ஒத்தக்கடை அருகே வௌவால் தோட்டம் பகுதியில் இன்றுமாலை நடைபெறும் தென்மாவட்ட அளவிலான பி.ஜே.பி. நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து இதில் ஆலோசிக்கப்படும் என தெரிகிறது.

முன்னதாக மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் இன்றுகாலை தரிசனம் மேற்கொண்ட திரு.அமித்ஷாவிற்கு கோவில் நிர்வாகம் சார்பில் பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கட்சியின் முக்கிய பிரமுகர்களை திரு. அமித்ஷா சந்தித்தார்.

❖❖❖❖❖

ஜீதேந்திரசிங்

பிரான்சில் இன்று தொடங்கும் சர்வதேச பெருங்கடல்கள் மாநாட்டில் மத்திய புவி அறிவியல் இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திரசிங் தலைமையிலான இந்திய குழு பங்கேற்கிறது.

கடல் நிலைத்தன்மை, கடல்சார் ஒத்துழைப்பில் இந்தியாவின் உலகளாவிய ஈடுபாட்டிற்கான பிரதமர் திரு.நரேந்திர மோடியின் உறுதிப்பாடு இம்மாநாட்டில் வலியுறுத்தப்படும்.

வரும் 13-ம் தேதிவரை நடைபெறும் இம்மாநாட்டில் நிலையான கடல் நிர்வாகம், பெருங்கடல்களின் ஆரோக்கியத்திற்கான உறுதியான நடவடிக்கைகள் குறித்து உயர்மட்ட ஆலோசனை இடம்பெறும்

இம்மாநாட்டின் ஒருபகுதியாக இந்தியாவின் முக்கிய நட்பு நாடுகளின் அறிவயல் துறை அமைச்சர்களுடன் டாக்டர் ஜீதேந்திரசிங் ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖

அனைத்து கட்சி குழு

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அனைத்துக் கட்சிக்குழு உலக நாடுகளிடம் எடுத்துரைத்து வரும் நிலையில் பி.ஜே.பி.நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழு ஜெர்மனி நாட்டு தலைவர்களை சந்தித்தது.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஜெர்மனி உறுதியான ஆதரவு அளிக்கும் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜோஹன் வேடேபுல் தெரிவித்ததை சுட்டிக்காட்டிய திரு. ரவிசங்கர் பிரசாத், அணுஆயுத தாக்குதல் தொடபான பாகிஸ்தானின் அச்சுறுத்தலை இந்தியா உறுதியுடன் எதிர்கொண்டதற்கு உலக நாடுகள் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்களிடம் வரவேற்பு உள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖

மாநிலங்களவை தேர்தல்

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை இடங்கள் மற்றும் அசாம் மாநிலத்தில் காலியாக உள்ள 2 மாநிலங்களவை பதவியிடங்களுக்கு வரும் 19-ம் தேதி தேர்தல் நடைபெறும் நிலையில் வேட்பு மனு தாக்கல் நாளையுடன் முடிவடைகிறது.

மனுக்கள் பரிசீலனை நாளைமறுநாள் நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிக்கொள்ள வரும் 12-ம் தேதி கடைசிநாளாகும்.

இதனிடையே திமுக-வின் திரு.பி.வில்சன், திரு.எஸ்.ஆர். சிவலிங்கம், கவிஞர் சல்மா மற்றும் கட்சி சார்பில் மக்கள் நீதிமய்ய தலைவர் திரு.கமலஹாசனும்,

அஇஅதிமுக சார்பில் திரு. ஐ.எஸ்.இன்பதுரை, திரு. எம்.தனபால் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖

முதலமைச்சர் நிவாரணம்

விருதுநகர் மாவட்டம் மெட்டுக்குண்டு கிராமத்தில் தனியார் வெடிபொருள் தொழிற்சாலையில் நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்த அருப்புக்கோட்டையை சேர்ந்த ஒருவரின் குடும்பத்திற்கு 4 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖

தமிழகம் வளர்ச்சி

தமிழ்நாட்டில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரத்து 639 கோடி ரூபாய் மதிப்பில், 11 மாநகராட்சிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னையில் இன்று வெளியான அரசின் செய்திக்குறிப்பில் 4 மாநகராட்சிகள், 13 நகராட்சிகள், 49 பேரூராட்சிகள், 12 கோடி மக்கள் பயன்பெறும வகையில் 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 71 குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலை சீரமைப்பு திட்டத்தின்கீழ் 5 ஆயிரத்து 693 புதிய சாலைப்பணிகள்,

ஆயிரத்து 120 கோடி ரூபாய் மதிப்பில் 99 புதிய பேருந்து நிலையங்கள்,

194 கோடி ரூபாய் மதிப்பில் 100 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள்,

சென்னை போரூரில் 4 ஆயிரத்து 276 கோடி ரூபாய் மதிப்பில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

அனைத்து வகையான அரசு சேவைகளை பொதுமக்கள் எளிதில் பெற மையப்படுத்தப்பட்ட வலைதள மின்ஆளுகை பயன்பாடு மற்றும் மக்களுடன் முதல்வர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அரசு கூறியுள்ளது.

15-வது நிதி ஆணைய மானிய திட்டத்தின்கீழ் 213 தேசிய சுகாதார பணிகள் மற்றும் 2-ம் கட்ட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனிநபர் கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஒன்றியம் அதவத்தூர் முத்துராஜா நடுநிலைப்பள்ளியில் 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான புதிய வகுப்பறை கட்டடங்களை மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று திறந்து வைத்தார்.

❖❖❖❖❖

சிவசங்கர்

அரியலூர் அருள்மிகு ஆலந்துரையார் கோதண்ட ராமசுவாமி திருக்கோவில் தேர் வெள்ளோட்டத்தை மாநில போக்குவரத்துறை அமைச்சர் திரு. எஸ். எஸ். சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

82 ஆண்டுகளுக்கு பிறகு 18 அரை லட்சம் ரூபாய் மதிப்பில் இந்த புதிய தேர் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலூரை அடுத்த தீர்த்தகிரி மலைக்குன்றில் நிறுவப்பட்ட உலகின் 3-வது பெரிய முருகன் சிலைக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ராணிப்பேட்டை, திருப்பத்தூர் உள்ளிட்ட அண்டை மாவட்டங்கள் ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் இதில் பங்கேற்றனர்.

பிரசித்தி பெற்ற மும்மூர்த்தி ஸ்தலமான திருச்சி உத்தமர் கோவில் மற்றும் திருவெறும்பூர் அருள்மிகு எறும்பீஸ்வரர் திருக்கோவில் வைகாசி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

❖❖❖❖❖

விக்சித் க்ருஷி சங்கல்ப்

நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம், பாச்சல், ஊராட்சிகளில் மத்திய அரசின் வேளாண் வளர்ச்சிக்கான விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்

வார விடுமுறையை ஒட்டி சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

அதிகாலையில் கடற்கரை திடலில் சூரிய உதயத்தை கண்டு ரசித்ததுடன் கடல் நடுவே உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம், திருவள்ளுவர் சிலை, கண்ணாடி கூண்டு பாலம் உள்ளிட்டவற்றிற்கு படகு சவாரி மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖

வைகாசி விசாகம்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெறும் வைகாசி விசாக திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான முனிகுமாரர்களுக்கு சாப விமோசனம் அளிக்கும் நிகழ்வு நாளை நடைபெறுகிறது.

இந்நிலையில் தென்காசி, விருதுநகர், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையாக திருச்செந்தூர் வந்தவண்ணம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

வைகாசி விசாகத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖

இருவரி

மயிலாடுதுறை மாவட்டத்தில் நடப்பாண்டு ஆயிரத்து 92 மெட்ரிக் டன் பச்சைபயிறு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் பச்சை பயிறு சாகுபடி செய்யும் விவசாயிகள் அரசின் விலை ஆதரவு திட்டத்தில் பதிவுசெய்து பயன்பெறுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பெரம்பலூர் கோட்டத்திற்கு உட்பட்ட மின்நுகர்வோர் குறைதீர்நாள் கூட்டம் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

❖❖❖❖❖

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 6 ஆயிரத்து 100 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 113.8 அடியாகும்.

குடிநீர் தேவைக்காக ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இதனிடையே தர்மபுரி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 6 ஆயிரத்து 500 கனஅடியாக உள்ளது.

❖❖❖❖❖

டென்னிஸ்

பிரென்ஞ் ஓப்பன் டென்னிஸ் கிராண்ஸ்லாம் ஆடவர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் நடப்பு சாம்பியன் ஸ்பெயினின் Carlos Alcaraz - இத்தாலியின் Jannik Sinner ஐ இன்று எதிர்கொள்கிறார்.

கிராண்ஸ்லாம் பட்டத்திற்கான போட்டியில் 11 முறை இருவரும் நேருக்கு நேர் மோதிய நிலையில் அல்கராஸ் 7 முறையும்,

சின்னர் 4 முறையும் வெற்றிபெற்ற நிலையில் இன்றைய போட்டி ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மகளிர் இரட்டையர் கிராண்ஸ்லாம் பட்டத்திற்கான இறுதிபோட்டியில் இத்தாலியின் Sara Errani, Jasmine Paolini இணை - கஜகஸ்தானின் Anna Danilina, செர்பியாவின் Aleksandra Krunic இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் ஒற்றையர் கிராண்ஸ்லாம் பட்டத்தை அமெரிக்காவின் கோகோ கா.ஃ.ப் வென்றார்.

❖❖❖❖❖

ஹாக்கி

நெதர்லாந்தில் நடைபெறும் ஹாக்கி ப்ரோ லீக் போட்டியின் 2-ம் ஆட்டத்தில் இந்தியா நாளை நெதர்லாண்ட்ஸை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவில் வரும் 14-ம் தேதி இந்தியா தனது முதல்போட்டியில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖